# PUNCTUALITY

# FIRST, LAST

# AND

# FOR EVER

# PERFECTION IS

# OUR AIM

# EXCELLENCE WILL BE

# TOLERATED

# திருப்தியில் வாழ்தல் ...

நான் ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தேன். பள்ளிக்கூடம் போய் வருவதற்கு 'ஸ்டான்டர்டு கார்' அப்பாவின் ஆபிஸிலிருந்து வரும்.

மிகவும் பழைய மாடல் கார் அது. நண்பர்கள் எல்லாம் கிண்டல் பண்ணுவார்கள்.. 'மூட்டைப்பூச்சி கார் வந்துவிட்டது' என்று. மிகவும் வருத்தப்படுவேன். ரோசம் தாங்க முடியாமல் என்னுடைய ஆதங்கத்தை அம்மாவிடம் வெளிப்படுத்தினேன் :

'அம்மா! அப்பா ஆபிஸில்தான் நிறைய கார் இருக்கிறதே எனக்கு வேறு நல்ல கார் அனுப்பினால் என்ன? இந்தக் காரில் போக எனக்குக் கூச்சமாக இருக்கிறது.. நண்பர்கள் செய்யும் பரிகாசத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை '.

மறுநாள் அப்பா என்னை அழைத்தார். ஒரு பேப்பரையும், பேனாவையும் என்னிடம் கொடுத்து , ' உன்னுடைய வகுப்பில் படிக்கும் எல்லா மாணவர்களின் பெயரையும் எழுது' என்றார்கள். எழுதினேன். 'அவர்கள் பெயருக்கு நேராக, அவர்கள் ஸ்கூலுக்கு எப்படி வருகின்றார்கள் என எழுது ' என்றார்கள்.

பஸ், ஸ்கூட்டர் , ஆட்டோ, பைக், கார், சைக்கிள், ஸ்கூல் பஸ், வேன், நடந்து என எழுதினேன். அப்பா கேட்டார் : 'உன்னையும் சேர்த்து காரில் வருபவர்கள் எத்தனை பேர் ?' மூன்று என சொன்னேன் .

' 41 பேரில் 2 பேர் உன்னைவிட அதிர்ஷ்டசாலிகள். காரில், அதிலும் நல்ல மாடல் காரில் வருகிறார்கள். ஆனால் மீதி 38 பேர் உன்னைவிட சாதாரண நிலையில் உள்ளார்கள். அதனால் அவர்களைவிட நீதான் அதிர்ஷ்டசாலி. அப்படி நினைத்து விட்டாயானால் உனக்கு எந்த ஏக்கமும் வராது, புரிந்ததா?'.

'புரிந்தது' என்றேன். கடவுள் கொடுத்ததை வைத்துக் கொண்டு திருப்தியில் வாழவேண்டும் என்று கீதையிலே ஸ்லோகம் படிக்கும்போது புரியவில்லை. ஆனால், அப்பா சொல்லும்போது புரிந்தது. அக்ஷர சுத்தமாகப் புரிந்தது.!

# EXCELLENCE

**is not a one-time achievement.**

***It's a HABIT.***

# அவர்களுக்கு அது ஹாரர்ஸ்கோப் !

முல்லா நஸ்ருதீனுக்கு அன்று காலையில்தான் திருமணம் நடந்தது. அன்றிரவு நதியைக் கடந்து, மறு கரைக்கு முல்லா நஸ்ருதீனும் அவரது இளம் மனைவியும் உறவினர்களோடு படகில் போய்க்கொண்டு இருந்தார்கள்.

அப்போது திடீரென்று புயல் அடித்தது. நதியிலே வெள்ளம் கரை புரண்டது. இவர்கள் பயணித்துக் கொண்டிருந்த படகு பேயாட்டம் ஆடியது. மணப்பெண் உட்படப் படகில் இருந்த அத்தனை பேரையும் மரணபயம் தொற்றிக் கொண்டது ! ஆனால், முல்லா மட்டும் பயமேதும் இல்லாமல் இருந்தார்.

இதைப் பார்த்த புது மணப்பெண், ‘உங்களுக்குப் பயமாக இல்லையா ?’ என்று கணவரை ஆச்சரியத்தோடு கேட்டாள். அதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லாமல் தன் இடுப்பிலே செருகியிருந்த கத்தியை எடுத்து, மனைவியின் குரல்வளையைக் குத்துவதுபோல் ஓங்கினார். மனைவியின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை !

அப்போது முல்லா நஸ்ருதீன் தன் மனைவியைப் பார்த்து, ‘கத்தி என்றால் உனக்குப் பயமாக இல்லையா... ? ’ என்று கேட்டார். அதற்கு அவரது மனைவி, ‘கத்தி வேண்டுமானால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால், அதைப் பிடித்துக் கொண்டிருப்பவர் என்மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் எனது கணவர். அதனால் நான் பயப்படவில்லை... ’ என்றாள்.

‘அதே போலத்தான் எனக்கும். இந்த அலைகள் வேண்டுமானால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால், இதை ஆட்டுவித்துக்கொண்டு இருக்கும் அல்லாஹ் அன்பு மயமானவர். அதனால் எனக்குப் பயமில்லை...’ என்றார் முல்லா நஸ்ருதீன்.

முல்லா நஸ்ருதீனுக்கு அல்லாஹ்மீது நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. அல்லாஹ்மீது அவருக்கு நம்பிக்கை இல்லை என்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லை என்றால், படகில் பயணித்த மற்றவர்களைப் போல முல்லா நஸ்ருதீனும் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்திருப்பார்.

இதே உண்மையை நமது வாழ்க்கையிலும் பொருத்திப் பார்க்கலாம். நமக்குப் பயம் ஏற்படுகிறது என்றால், நம்மீதே நமக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் பொருள் !

‘நான் கடவுளுக்குப் பயந்தவன்.. என்று பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். இது அபத்தமானது. கடவுளிடம் நாம் செலுத்த வேண்டியது அன்புதானே தவிர, பயம் இல்லை !

நமது உபநிஷத்துக்கள் சொல்லும் மிகப் பெரிய விஷயமே, ‘பயம் இல்லாமல் இரு’ என்பதுதான்... என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.

# பாடம் கற்றுக் கொள்வோமே !

ஒரு தந்தை, தன் மகனை ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். அவர் தன் மகனுக்கு என்ன அறிவுரை கூறினார் என்பது தெரியவில்லை. ஆனால் தன் மகனது வகுப்பாசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

1. என் மகனுக்கு பறவைகள், வானம், சூரியன், செடி கொடிகள், பூக்கள் என்று **இயற்கையை ரசிக்கக்** கற்றுக்கொடுங்கள்.
2. தோல்வியை **ஏற்றுக் கொள்ளவும்,** வெற்றியைக் **கொண்டாடவும்** அவனுக்குச் சொல்லித் தாருங்கள்.
3. தன் மனதுக்கு 'சரி' என்று தோன்றுவதை என் மகன் **துணிச்சலுடன்** செயல்படுத்த அவனைப் பழக்குங்கள்.
4. பொறாமையிலிருந்து அவன் விலகியே இருக்கட்டும் என்பதைப் புரிய வையுங்கள்.
5. மற்றவரை ஏமாற்றுவதை விட தோற்பதே கண்ணியம் என்பதை அவனுக்குக் கற்றுத் தாருங்கள்.
6. சுய சிந்தனையில் நம்பிக்கை கொள்ளச் சொல்லுங்கள்.
7. உறுதியானவர்களிடம் உறுதியாகவும், மென்மையானவர்களிடம் மென்மையாகவும் நடந்து கொள்ளக் கற்றுக்கொடுங்கள்.
8. குற்றம், குறை கூறுபவர்களை அவன் அலட்சியப்படுத்த அறிவுறுத்துங்கள்.
9. அளவுக்கு அதிகமாக இனிமையாக பேசுபவர்களிடம் அவன் எச்சரிக்கையாக இருக்கக் கற்றுக்கொடுங்கள்.

இவற்றை எழுதிய தந்தை யார் தெரியுமா?

**"ஆப்ரகாம் லிங்கன்"**

**மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள். இவை குழந்தைகளுக்கு மட்டுமா பொருந்தும்?**
**பெரியவர்களான நமக்கும் பொருந்துமல்லவா?**

YOU CANNOT HAVE A SECOND CHANCE

TO MAKE FIRST IMPRESSION

OUR PHILOSOPHY IS VERY SIMPLE :

PERFECTION IN EVERY VENTURE

# THOSE WHO KNOW DO NOT SPEAK

*- The Tao Te Ching, 6th c., B.C.*

知者不言

# ELEVEN WAYS TO MAKE A GOOD IMPRESSION

When you go for your first interview - whether it is for a job or for a place in further education, there are things that can help you, quite apart from your qualifications.

1. Take advice from a teacher or parent on what to expect at an interview.
2. If you are nervous, try going through a practice interview with a parent or a friend the day before. You can make mistakes at this interview but not at the real one.
3. Prepare your clothes for your interview the night before. Always wear something that you are comfortable in. Your clothes should be clean and tidy. Sew on any buttons that have come off.
4. Look at your hands. You are going to have to shake hands with your interviewers. Cut and clean your nails.
5. Make sure you have clean hair.
6. Arrive for your interview on time. Five minutes early is ideal. Five minutes late will count against you.
7. When you greet your interviewer, use direct eye contact, and smile.
8. Don't chew gum or smoke at interviewers.
9. As well as discussing your career, talk about what you like doing in your spare time.
10. Don't fidget, bite your nails or twist your hair. Try to look as relaxed as you can.
11. Towards the end of the interview, you will probably be asked if you have any questions arising from what you've been told about the job or the course. There may be something you do want to ask because it hasn't been explained. Be brave and come out with your question. If there's nothing you want to ask, say so.

THE MOST BEAUTIFUL THING IS TO SEE A PERSON SMILING...

AND EVEN MORE BEAUTIFUL IS,

KNOWING THAT YOU ARE THE REASON BEHIND IT.

**You can do whatever you wish to do provided your will power is sufficiently active. Wealth and Health are not reached by pure intelligence but by the practical exercise of the WILL.**



# Your Efforts May Fail

# But Don't fail to make any effort

தாய் தந்தை குழந்தைகளுக்கு இடையே அன்னியோன்யத்தை வளர்க்க கிறித்துவ மதம் சொல்லும் யோசனை :

‘‘ தினமும் இரவு படுக்கப்போவதற்கு முன்பு எந்தக் குடும்பம் ஒன்றாக அமர்ந்து பிரார்த்தனை நடத்துகிறதோ அந்தக் குடும்பம் கடைசி வரை ஒன்றாக இருக்கும். ’’

நல்லதை நினைப்போம்

நல்லதைப் பேசுவோம்

நல்லதைச் செய்வோம்

நல்லது தானாக வரும்



**THERE ARE NO ELEVATORS TO THE HOUSE OF SUCCESS**

**AND THE STAIRS ARE HARD TO CLIMB**

**BUT WHEN YOU REACH THE VERY TOP**

**THE VIEW IS VERY FINE**

# W I L L  P O W E R

பரிமளா பட்டோலி என்ற பெண்மணி இமயமலையில் உள்ள ஒரு சிகரத்தைத் தன் குழுவினரோடு சேர்ந்து சென்று தொட்டுவிட்டுத் திரும்பியுள்ளார்.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான இவர் ஒரு பார்வையற்ற பெண்மணி !

**என்ன ஒரு மன உறுதி !**

**என்ன ஒரு தன்னம்பிக்கை !!**

I'D RATHER
SEE MY LUNCH
ALIVE....
THAN DEAD



ON THE STREET I SAW A LITTLE CHILD, HUNGRY AND SHIVERING IN THE COLD. I BECAME ANGRY AND SAID TO GOD, " WHY DO YOU ALLOW THIS ? WHY DON'T YOU DO SOMETHING ? "

GOD DID NOT REPLY. THAT NIGHT HE SAID, QUITE SUDDENLY : **" I CERTAINLY DID SOMETHING; I MADE YOU."**

SRI AYYAPPA SANGAM, Tiruchirappalli - 620 001.



**THERE IS NO ELEVATOR TO SUCCESS**

**WE HAVE TO USE ONLY THE STAIRS**

சர் வின்ஸ்டன் சர்ச்சில் எத்தனையோ உணர்ச்சிபூர்வமான உரைகள் நிகழ்த்தியிருக்கிறார். ஒருமுறை இளைஞர்கள் மத்தியில் அவரைப் பேசுவதற்கு அழைத்தார்கள்.

சர்ச்சில் ஒரே ஒரு வாக்கியம்தான் பேசினார். ஆனால், அந்த வாக்கியம் இன்று எல்லோரும் மேற்கோள் காட்டும் மறக்க முடியாத வாக்கியமாக அமைந்துவிட்டது. அவர் பேசியது.

**NEVER NEVER**

**NEVER GIVE UP !**

தவறு நிகழ்ந்த பிறகு தண்டிப்பதைவிட

தவறு நிகழாதபடி *கண்டிப்பது* மிகவும் சிறந்தது!



சுவாமிகளின்மீது மிகவும் பக்தியும்
அன்பும் கொண்டிருந்த அன்பர் ஒருவர்
ஒருநாள் அவரிடம் விண்ணப்பித்தார் :

**“ நான் சுவாமிகளை என்றும் மறக்கக் கூடாது. நான் நினைத்தபோதெல்லாம் தாங்கள் வந்து எனக்கு அனுக்கிரஹம் பண்ண வேண்டும்”**

சுவாமிகள் அமைதியாக பதில் அளித்தார்

***“தினமும் ஒரு நல்ல காரியம் செய். அப்போதெல்லாம் நான் அங்கு இருப்பேன்.”***

BE AN OPTIMIST

YOU CAN ACHIEVE

WHAT YOU WANT TO

ACHIEVE

முடிந்தவரை செய்வது முயற்சி அல்ல,

முடிக்கும் வரை செய்வதுதான் முயற்சி.

# மீண்டும் ஒரு பிறவி

உலகத்திலேயே மிகவும் சந்தோஷத்தைக்
கொடுக்கக்கூடியது என்னவென்றால் அது
மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதுதான்.
பிறருக்காக வாழும் நெறியான வாழ்க்கையும்,
தர்மம் செய்யும் நல்ல மனமும் கிடைத்துக்
கொண்டேயிருக்குமானால் பகவானே !
எனக்கு மீண்டும் ஒரு பிறவியைக் கொடு.



**" It is better to be interdependent than to be dependent or independent "**

# ?

# IF IN DOUBT,

# ASK